வேண்டுமென்ற நோக்கத்தோடு, எஸ்.எம்.ஐ.பி. என்கின்ற தனி சிறப்புப் பாசனத் திட்டத்தின்கீழ் அதிகமான குளங்களை, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பாடு செய்கிறோம். மழை நீரின் மூலம் கிடைக்கிற தண்ணீரை வீணாக்காமல், பாசன வசதிக்கு உறுதுணையாக இருப்பதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 558-ம், 559-ம் மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக் கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வேதாரண்யம் பகுதியில் உரத் தொழிற்சாலை.

*வினா எண் 560—திரு மா. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் ரூ. 100 கோடி திட்டத்தில் உரத் தொழில் ஆரம்பிக்க ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:. (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

தென் மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு.

*வினா எண். 561 :—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 16—7—1978-ம் தேதி தென் மாநில முதலமைச்சர்களின் மாநாடு சென்னையில் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் நகல் ஒன்று* அவையில் வைக்கப்பட்டுள்ளது.

[* 797–798 ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.]

1979 மார்ச் 30]

திரு. வி. கே. கோதண்டராமன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மாநாட்டிலே இந்தி பேசாத மாநிலங்கள் ஏற்றுக் கொள்ளும் வரையில் இந்தியைத் திணிக்கக் கூடாது என்கின்ற அளவுக்கு முன்னால் பிரதம அமைச்சர்களாக இருந்த பண்டிட் ஜவகர்லால் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி அம்மையார், இப்பொழுது உள்ளவர்—மொரார்ஜி உட்பட எல்லோருமே சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், தமிழ்நாட்டிலேயிருந்து இராணுவத்திலே சேரக்கூடியவர்களை 6 மாதம் அங்கே பயிற்சி பெற்றதற்குப் பிறகும் இந்தி பேசத் தெரியுமா என்று கேட்டு, தெரியாது என்று சொன்ன காரணத்தினால் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறார்களே, அது அமைச்சரவர்களுக்கு தெரியுமா? இது சம்பந்தமாக ஏற்கனவே ஒரு மனுவும் முதலமைச்சரவர்களிடம் கொடுக்கப் பட்டிருக்கிறது. கடிதம் சேர்ந்ததற்கு எந்தப் பதிலும் இல்லை? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்குப் பதில் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தீர்மானத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ‘‘...... சில அமைச்சகங்கள் மறைமுகமாக இந்தியை திணிக்க முயற்சி செய்துள்ளமை கவலை தருவதாக உள்ளது என்று இம்மாநாடு கருத்துத் தெரிவிக்கிறது........’’ என்று. சில அமைச்சகங் களில் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவார்களானால் அது வருந்தத்தக்கது என்று ஏற்கனவே தென்னக மாநில முதல் வர்கள் மாநாடு கண்டித்திருக்கிறது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், கோதுமை, நெல் கொள்முதல் விலை, கரும்பு - லெவி சர்க்கரை விலை நிர்ணயம், ஊதியக் கொள்கை, மொழிச் சிறுபான்மையினர் பாதுகாப்பு, வரி வருவாய் ஒதுக்கீடுகள், மொழிப் பிரச்சினை இவைபற்றி எடுக்கப்பட்ட முடிவை இம்மன்றமும் தமிழக மக்களும் பாராட்டுகிறார்கள். அதுபோல், சுதந்திரம் அடைந்த பிறகு எத்தனை முறை யார், யார் தமிழக முதல்வராக இருந்த பொழுது, இத்தகைய மாநாடு நடைபெற்றது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே சோனல் கவுன்சில் என்ற அடிப்படையில் தென்னக முதல்வர்களை வைத்து, மத்திய உள்துறை அமைச்சகம் மாநாடுகள் நடத்துவது வாடிக்கை. ஆனால், தென்னக முதல்வர்கள் தாங்களே ஒன்றுகூடி பேசியது இதுதான் முதல் தடவை.

[1979 மார்ச் 30

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாநில முதலமச்சர்களுடைய மாநாடு சென்னையில் நடைபெற்றது. அங்கு இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சென்னையிலே யிருக்கிற ஐ.டி.ஐ-யில் ஆங்கிலத்திலும், இந்தியிலும்தான் கேள்வித்தாள்கள் தருகிறார்கள். இங்கே இருக்கக்கூடிய அரசு இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதாகக் கூறும்போது, அங்கே கேள்விகள் தமிழில் தருவதில்லை, ஆகையினாலே, இந்தி ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறும் இந்த அரசு, இந்த மாநாட்டில் தீர்மானம் போட்டிருக்கிறது. ஆகவே, அந்த ஆதிக்கத்தை எதிர்க்க இந்த அரசு தயாராக இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20.]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, ஐ.டி.ஐ. யா, அல்லது ஐ.ஐ. டி.யா. என்று விளக்க வேண்டுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: ஐ.டி.ஐ. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஐ.ஐ.டி. என்பது மத்திய அரசின் எல்லைக்குட்பட்டது. ஐ.டி.ஐ. என்பது மாநில அரசின் எல்லைக்குட்பட்டது. இங்கே நடந்தால் நாம் நடவடிக்கை எடுக்க முடியும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, நம்முடைய தென்னகத்திலே உள்ள முதலமைச்சர்களின் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் மிகவும் முக்கியமானவை. கோதுமைக்கு குவிண்டால் ஒன்றுக்கு 23·19 ரூபாய் உதவித் தொகை தரப்படுகிறது. ஆனால், நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு 4 காசுதான் தரப்படுகிறது. கோதுமைக்கு தரப்படும் அதே உதவித் தொகை நெல்லுக்கும் கொடுக்க மத்திய அரசு முன்வரவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதே போல கரும்புக்கும் ரூ. 125 கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது, இந்தத் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவர, மேலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன, முயற்சிகள் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்தத் தீர்மானங்கள் மத்திய அரசுக்கு அனுப்பபட்டன. அதோடு மட்டுமல்லாமல், விலை நிர்ணயக்குழுவிடத்திலும், அந்தக் கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. கேட்கிற நிலையில் நாம் இருக்கிறோமே தவிர, கொடுக்கிற நிலையில் இல்லை.

1979 மார்ச் 30]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மத்திய அரசு விதித்து வசூலிக்கிற வரிப்பணத்தில் இருந்து 75 சதவீதம் மாநிலங்களுக்கு கொடுக்கவேண்டும் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளதே, அது சம்பந்தமாக மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? 75 சதவீதம் கொடுத்துள்ளார்களா இல்லை என்று சொன்னால் அதற்கான நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு நிதி ஆதாரங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அந்தக் கோரிக்கைகள் வைக்கப்பட்டன. தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்திலும் அது பற்றி விரிவாக ஆராயப்பட்டு, எப்படி நிதி ஒதுக்கம் செய்யவேண்டும் என்ற முடிவை அண்மையில் வெளியிட்டு, அந்தக் கருத்தின் அடிப்படையில் ஒதுக்கப்படவிருக்கிறது, என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த தென்னக முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட, கேரள முதலமைச்சர், கருநாடக முதலமைச்சர், ஆந்திர முதலமைச்சர் ஆகிய 3 முதலமைச்சர் அவர்களும் ஆளுகிற மாநிலங்களில் மும்மொழிக்கொள்கையை ஏற்று, இந்தியை அந்த மாநிலங்களில் ஏற்று இருக்கிறார்கள். அங்கேயுள்ள பள்ளிக்கூடங்களில் சொல்லிக்கொடுக்கிறார்கள். அந்தக் கொள்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறதா? அல்லது அதற்கு முரண்பட்டு இருக்கிறதா? இந்தியை அவர்கள் சொல்லி கொடுத்ததால் இந்த மாநில மக்கள் பாதிக்கப்படவில்லை என்று அவர்களே உணர்கிறார்கள், அந்த உணர்வு இந்த அரசுக்கு ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இருமொழிக்கொள்கையை ஏற்றுக்கொண்டு இருக்கிற நாம், இந்தியை எதிர்ப்பதை விட மும்மொழிக்கொள்கையை ஏற்றுள்ள அவர்கள் எதிர்க்கிறார்கள் என்பது ஒரு படி முன்னேற்றம். இந்தி எதிர்ப்பு என்று நாம் சொல்வது இந்தியாவில் உள்ள எல்லா மக்களுக்கும் சமவாய்ப்பு இல்லை என்பதால் ஆகும்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவர் அவர்களே, பொதுவான ஊதியக் கொள்கை தொடர்பான பிரச்சினைகளை முதலில் தென்மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் நல அமைச்சர்கள் கூடிப்பேசி அவர்களது கருத்தை அறிந்து கொண்டு, அவை குறித்து முதல்வர்கள் அளவில் விவாதிக்கவேண்டும் என்று தீர்மானம் இருக்கிறது. அதனுடைய அடிப்படையில் தென்

மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர் நல அமைச்சர்கள் கூடிப் பேசுகிற சாத்தியக்கூறு உருவாக்கப்பட்டு இருக்கிறதா? அப்படி இல்லாவிட்டால் இனி எதிர்காலத்தில் அதற்கு எப்போது ஏற்படும் என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே—வசதிப்படும்போது கூடிப்பேசுவர்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீர்மானத்தில் ஒரு பகுதியைப் படித்துக்காண்பித்தாகள், அதற்கு இந்தியப் பிரதம அமைச்சர் எழுதிய பதில் என்ன? அதற்குப் பிறகு சில காரியங்கள் மறைமுகமாக இந்தியைத் திணிப்பதற்கான முறையில் ஏற்பட்டுள்ளதா? குறிப்பாக, டெலிபோன் எக்ஸ்சேஞ்சு என்பது தற்போது டெலிபோன் பவன் என்று மாற்றப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்திற்கு பதில் வந்ததாகத் தெரியவில்லை. இருந்தாலும் இது ஏதோ நாங்கள் தீர்மானம் அனுப்பினோம். அதோடு பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று அல்லாமல் விழிப் போடு இருந்தால்தான் அந்த ஆபத்தைத் தவிர்க்க முடியும்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, இந்த தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு பல முடிவுகளை எடுத்திருக் கிறது. அதில் முக்கியமானது மத்திய அரசு வரி போட்டு வசூலிக் கக்கூடிய நிதியில் 75 சதவீதத்தை மாநிலங்கள் இந்த ஆண்டு தற்காலிகமாக தரவேண்டுமென்று கேட்டு, பெறுவதற்கு முயற்சி செய்யும் முடிவு. அதுகுறித்து அமைச்சரவர்கள் சொல்லும் போது தெளிவாக இல்லை. இந்த ஆண்டுக்கு என்றால் தற்போது இந்த ஆண்டு முடியப்போகிறது. அதற்கான முயற்சியில் தீவிர மாக முதலமைச்சரும் அமைச்சரவையும் ஈடுபட்டார்களா? தென் மாநில தொழிலாளர் நல அமைச்சர்கள் கூடிப் பேசிய பிறகுதான் தொழிலாளர்கள் பொதுவான ஊதியத்தைப் பற்றி முதலமைச்சர் கள் மட்டத்தில் விவாதிக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட் டிருக்கிறது. அதற்கான ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தொழிலாளர்கள் சம்பந்தமாக தொழிலாளர் நல அமைச்சர்கள் கூடிப் பேசி ஒரு முடிவுக்கு வந்து, அது பின்னர் முதலமைச்சர்கள் மாநாட்டில் விவாதிக்கப்படும் என்பது எடுத்த முடிவு. அவர்கள் இன்னும் கூடிப் பேசவில்லை. அவர்கள் கூடிப் பேசி, முடிவு செய்தால் முதலமைச்சர்கள் மாநாட்டில் அதுபற்றி விவாதிக்க லாம்.

1979 மார்ச் 30]

வசூலிக்கும் வரியில் 75 சதவீதத்தை மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லி நிதி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அப்போது திட்டம் வரையறை செய்யப்படவில்லை. இப்போது திட்டம் வரையறை செய்யப்படும் வாய்ப்பு வந்திருக்கிறது. ஆகையால் தான் தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் 'காட்கில் ஃபார்முலா' படி ஆரம்பத்தில் ஓரளவு நிதி ஒதுக்கித் தந்தார்கள். பின்னர் 2,500 கோடி ரூபாயை மத்திய சர்க்காரிலிருந்து மாநிலங்களுக்கு கூடுதலாக அனுப்பித் தரவேண்டுமென்ற தீர்மானத்தின் அடிப் படையில் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அது முடிந்த பிரச்சனை.

திண்டிவனம் தொகுதியில் மின் தொடர்பு துண்டிப்பு.

*வினா எண். 562—திரு. டி. ஆர். இராசாராம் ரெட்டி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மின்துறையினரால் வீடு, கடைகளுக்கு தரப்பட்டிருந்த விளக்குகளுக்கு உண்டான மின் தொடர்பை எவ்வித அறிவிப்பும் இன்றி பீஸ் கேரியரை எடுத்துச் செல்வது நமதரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் 1977 ஜனவரி முதல் 1978 ஜனவரி முடிய திண்டிவனம் தொகுதியில் எத்தனை இடங்களில் பீஸ் கேரியர் எடுக்கப்பட்டன?

(இ) எத்தனை இடங்களில் எடுக்கப்பட்ட பீஸ் கேரியர் திருப்பி தரப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) அவ்வாறு செய்யப்படுவதில்லை.

(ஆ) & (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

கடல் நீரின் வெப்ப வேறுபாட்டிலிருந்து மின் உற்பத்தி.

* வினா எண். 563—திரு. என். லட்சுமிநாராயணன் & திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சூரிய வெப்பத்தால் ஏற்படும் கடல் நீர் வெப்ப வேறு பாட்டுத் தன்மையைப் பயன்படுத்தி மின் சக்தி உற்பத்தி செய்யும் முயற்சியில் தமிழ்நாடு மின்சார வாரியம் ஈடுபட்டிருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அம்முயற்சியில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.